குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.95/2019

அ.சா.5

2024–ம் ஆண்டு நவம்பர் 14–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 05–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அப்துல்சமது | ஜாதி | |
| தந்தை பெயர் | அப்துல் ைஹ | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.13 மணி,

Accused A1.Kaliya Moorthi and A2.Ramasami Present. Advocate Mr.A.Nagendiran present for A1 and for Advocate Mr.Kannan for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் தாரமங்கலத்தில் குடியிருந்து, கண்ணாடி கடை வைத்துள்ளேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். வழக்கு சம்பவத்தின்போது, அவர்கள் இருவரும் நான் வாடகைக்கு குடியிருந்து வீட்டின் மாடிவீட்டில் நான் குடியிருந்து வந்தேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு, ஒருநாள் நான் சென்னை சென்றிருந்த சமயத்தில் கீழ் வீட்டில் திருடுபோய்விட்டதாக என் மனைவி என்னிடம் சொன்னார். நான், சென்னையிலிருந்து திரும்பி வந்தபின்பு, போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 19.08.2018 ஆம் தேதி இரவு சுமார் 01.00 மணியளவில் நான் குடியிருந்த வீட்டின் கீழ் வீட்டில், குடியிருந்த அ.சா.1 வீட்டின் கதவை யாரோ தட்டி, அவர் திறந்தபோது, காவியா கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் தங்க செயினை அந்த நபர் பறித்துக்கொண்டு சென்றுவிட்டதாக சத்தம் போட்டார்கள். நானும், அருகில் குடியிருக்கும், சேட்டு, ராமாயி

மற்றும் அக்கம் பக்கம் உள்ளவர்கள் சேர்ந்து நகையை பறித்த நபர்களை தேடிப்பார்த்தபோது, அவர்கள் கிடைக்கவில்லை என்று கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.19 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.